8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதிகள் 30, 130 மற்றும் 132-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம் மற்றும் செயற்பாட்டினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு மற்றும் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் வரி மதிப்பீடு மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்தச்) சட்டமுன்வடிவு ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.